UNIVERSITÄTS-
**KINDERSPITAL ZÜRICH**

அவசர சூழ்நிலையில்
பெற்றோருக்கான தகவல்

# தலைக்காயம்/ மூளையதிர்வு



*Das Spital der Eleonorenstiftung*

# அவசர சிகிச்சை நிலையம் சிறுவர் வைத்தியசாலை சூரிச்

Consultation telephone: +41 58 387 78 80

கீழ்க்காணும் அறிகுறிகள் உங்கள் பிள்ளையில் தென்படுகின்றதா என அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு நீங்கள் அவதானிக்க வேண்டும்:

1) தலையிடி: உங்கள் பிள்ளைக்கு மென்மையான தலையிடி இருக்க வாய்ப்புண்டு. பிள்ளையின் வயதுக்குத் தகுந்த அளவு, வலியினைக் கட்டுப்படுத்தக் கூடிய பொருத்தமான மருந்தினைக் (உ-மாக, பனடோல்) கொடுத்தால் தலையிடி மறைந்து விடும்.
2) வாந்தி: உங்கள் பிள்ளைக்கு சிலவேளை வயிற்றைக் குமட்டலாம், ஆனால் வாந்தியெடுக்கத் தேவையில்லை. வாந்தியெடுத்தால், பிள்ளையை வைத்தியரிடம் கொண்டு சென்று காட்டுங்கள்.
3) நடத்தை: உங்கள் பிள்ளை எப்போதும் போல் சாதாரணமாக இருக்க வேண்டும். ஏதோ சரியில்லாத மாதிரியான சமிஞ்சைகளாக இருக்கக் கூடியன உ-மாக, மாறாட்டம், சினந்துகொண்டிருத்தல், சாப்பிடாமல் அல்லது குடிக்காமல் இருந்தல்.
4) களைப்பு: சாதாரணத்தை விட உங்கள் பிள்ளை களைப்பாக இருக்கச் சந்தர்ப்பமுண்டு. பிள்ளை சத்தியெடுக்காமலும் அதனது நடத்தை சாதாரணமாக இருக்குமட்டும் நீங்கள் அதனையிட்டுக் கவலைப்படத் தேவையில்லை. பிள்ளையை அமைதியாக இருக்க விடுங்கள்.

வைத்தியசாலைக்கு மீண்டும் செல்லுங்கள், ஒரு வேளை

- உங்கள் பிள்ளை மாறாட்டமாக இருந்தால் அல்லது அசாதாரணமாக நடந்து கொண்டால்
- நோவைக் குறைக்கக் கூடிய ஒரு மருந்தை உட்கொண்ட பின்பும், உங்கள் பிள்ளை சரியாகத் தலையிடிப்பதாக முறையிட்டால்
- உங்கள் பிள்ளை வாந்தியெடுத்தால்
- உங்கள் பிள்ளை பலவீனமாக அல்லது விறைத்துப் போனது போன்றிருப்பதாக முறையிட்டால்
- அல்லது நீங்கள் வேறு ஏதோ ஒரு காரணத்துக்காக கவலைப்பட்டால்

தலையில் காயம் ஏற்பட்ட பின்பு வரும் நாட்களில், உங்கள் பிள்ளை கீழ்க்காணுபவற்றையிட்டு முறைப்பாடு செய்ய வாய்ப்புண்டு:

- இலேசான தலையிடி
- கிரகித்தலில் தடங்கல்
- களைப்பு
- நித்திரைக் குழப்பம்

இந்த அறிகுறிகள் 48 மணித்தியாலங்களுக்குள் மறையாது விட்டால், நீங்கள் சிறுவர் வைத்தியருடன்/குடும்ப வைத்தியருடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

இந்த அறிகுறிகள் இருக்குமட்டும், உங்கள் பிள்ளையை விளையாட்டுக்களில் பங்குபற்ற நீங்கள் அனுமதிக்கக் கூடாது! செயற்பாடுகளின் போது, பிள்ளை தலையிடிப்பதாகக் கூறினால், உடனடியாக பிள்ளையை அமைதியாக இருக்க விட வேண்டும்.

UNIVERSITÄTS-
KINDERSPITAL
ZÜRICH

Das Spital der
Eleonorenstiftung

Universitäts-Kinderspital Zürich
Lenggstrasse 30
CH-8008 Zürich

www.kispi.uzh.ch
Telefon +41 44 249 49 49